டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 11.11.2025 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 26 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 117 - Madurai | Online Edition

# ஏற்றுமதி ஆய்வு முகமை சார்பில் மீனவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி காசிமேடு துறைமுகத்தில் நடைபெற்றது




புது தில்லி, நவ.10

மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஏற்றுமதி ஆய்வு முகமை யின் சென்னை கிளை மற்றும் தமிழ்நாடு அரசு மீன்வளத் துறை மற்றும் மீனவர்கள் நலத்துறை இணைந்து, “தூய்மை இருவார விழா – 2025-இன் ஒரு பகுதியாக, மீனவர்கள் சமூகத்திற்கான சுகாதார விழிப் புணர்வு நிகழ்ச்சியை 8.11.2025 அன்று சென்னை காசிமேடு மீன்பிடித் துறைமுகத்தில் நடத்தியது.

சென்னை ஏற்றுமதி ஆய்வு முகமையின் சார்பாக, துணை இயக்குநர் பொறுப்பு வகிக்கும் ஜெயபாலன், மீன்வளத்துறை மற்றும் மீனவர்கள் நலத்துறை உதவி இயக்குநர் பி.திருநாகேஸ் வரனுடன் இணைந்து இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

இந்நிகழ்வில், இரு அலுவலகங்களின் அதிகாரிகள், இந்திய கடலுணவு ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் (தமிழ்நாடு பிரிவு) துணைத் தலைவர் ஜகன் மற்றும் சங்க உறுப்பினர்கள், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வள பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள டாக்டர் எம்.ஜி.ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவன மாணவர்கள், சென்னை காசிமேடு மீன்பிடித் துறைமுகத்தைச் சேர்ந்த மீனவர்கள் உட்பட 100-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் உற்சாகமாகப் பங்கேற்ற காசிமேடு மீனவர்களுக்கு, படகுகளிலும், கரை இறங்கும் மையங்களிலும் மீன்களின் சுகாதாரமான கையாளுதல் குறித்து விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

மீன்வளப் பொருட்களின் பாதுகாப்பு, கரை இறங்கும் நிலையிலிருந்தே தொடங்குகிறது என்றும், சுத்தமான மற்றும் சுகாதாரமான மீன்பிடித் துறைமுகங்கள் மீன்களின் தரம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் என்றும் வலியுறுத்தப்பட்டது. மீன்பிடித் துறைமுகங்கள் தினமும் பெரிய அளவில் மீன்களை கையாளும் இடங்களாக இருப்பதால், சுகாதாரமற்ற சூழல், நோய்கள் பரவுவதற்கும், துர்நாற்றம், பூச்சி தொல்லை மற்றும் மீன்களின் தரக் குறைபாட்டுக்கும் வழிவகுக்கும் என விளக்கப்பட்டது.




எனவே கழிவுகளை அடிக்கடி அகற்றுவது, சரியான வடிகால் அமைப்பு, சுகாதார வசதிகள் மற்றும் சுத்தமான பணியிடங்கள் ஆகியவை மீன்கள் பாதுகாப்பாகவும், ஏற்றுமதிக்குத் தகுதியானவையாகவும் இருக்க அவசியம் என்று எடுத்துரைக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் ஒருமுறைப் பயன்படுத்தப்படும் நெகிழி பொருட்களின் தீமைகள் பற்றியும் வலியுறுத்தப்பட்டது.

பங்கேற்பாளர்கள் நெகிழி பைகள், கப்புகள், பாட்டில்கள் போன்றவற்றைத் தவிர்த்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்று பொருட்களை பயன்படுத்துமாறு ஊக்குவிக்கப்பட்டனர். இதன் மூலம் கடல் உயிரினங்கள் பாதுகாக்கப்படுவதுடன், மீன்வளப் பொருட்களின் தரம் மேம்படும் என்று வலியுறுத்தப்பட்டது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் சார்பாக சின்னசேலத்தில் அதிக பீட்டோ கரோட்டீன் ரக மக்காச்சோள வயல் விழா

கோயம்புத்தூர், நவ.10

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையமும் சிறுதானியங்கள் துறையும் இணைந்து உருவாக்கிய புதிய வீரிய ஒட்டு ரக மக்காச்சோளம் சிஎம்பிஎச் 19011 – கோ 6 – ப்ரோவிட்–டுக்கான வயல் விழா சின்ன சேலம் மேல்நாரியப்பனூர் கிராமத்தில் நடைபெற்றது.



இவ்விழாவிற்கு சிறுதானியங்கள் துறை தலைவர் முனைவர் சு.சிவக்குமார் தலைமையேற்றார். கள்ளக்குறிச்சி மாவட்ட வேளாண்மை உதவி இயக்குநர் (பொறுப்பு) பிரபாவதி மற்றும் கள்ளக்குறிச்சி வேளாண்மை அலுவலர் (வணிகம்) மு.ராஜ் குமார், ஆகியோர் கலந்து கொண்டனர். உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மைய இயக்குனர் முனைவர் ந.செந்தில் தலைமையுரை வழங்கினார். சிஎம்பிஎச் 19011 – கோ 6 – ப்ரோவிட் ரகத்தின் சிறப்பியல்புகளான, அதிக பீட்டாகரோட்டீன் சத்து, மற்றும் விளைச்சல் திறன் குறித்து விவசாயிகளிடம் விளக்கினார். இந்த அதிக பீட்டாகரோட்டீன் மக்காச்சோளம் குழந்தைகளிடம் வைட்டமின் ஏ சத்து குறைப்பாட்டை சரி செய்ய உதவும் எனவும் இந்த ரகத்தின் மூலம் தயாரிக்கப்படும் உணவுப்பொருட்கள் சந்தையில் நன்மதிப்பை பெறும் எனவும் தெரிவித்தார். இறுதியாக, ICAR–வேளாண்மை அறிவியல் நிலையம், கள்ளக்குறிச்சி முனைவர் விமலாராணி நன்றியுரை வழங்கினார். இந்த விழாவில் சின்னசேலம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளிலிருந்து பல்வேறு விவசாயிகள் கலந்து கொண்டு புதியமக்காச்சோள ரகம் –சிஎம்பிஎச் 19011 – கோ 6 – ப்ரோ–வின் சிறப்புகளை நேரில் அறிந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# கன்னியாகுமரி ரப்பர் உற்பத்தியாளர் நிறுவனத்தில் புதியதாக கோகோ விற்பனை



கன்னியாகுமரி, நவ.10

கன்னியாகுமரி ரப்பர் உற்பத்தியாளர் நிறுவனத்தில் புதியதாக கோகோ விற்பனை துவங்கப்பட்டுள்ளது. தற்போது ரப்பர், தென்னை மற்றும் பாக்கு தோட்டங்களில் ஊடுபயிராகவும், தனிப்பயிராகவும் அதிகமாக விவசாயிகள் சாகுபடி செய்ய ஆர்வம் காட்டி வரும் நிலையில் குமரி மாவட்டத்தில் உள்ள பழங்குடியினருக்கு இலவசமாக கோகோ கன்றுகள் சுமார் 25,000 வழங்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் முந்திரி மற்றும் கோகோ இயக்ககம், தோட்டக் கலை ஆராய்ச்சி நிலையம், பேச்சிப்பாறை மற்றும் மோண்டலீஸ் இந்தியா புட்ஸ் பிரைவேட் லிட் ஆகியவை இணைந்து மேற்கொண்டு வரும் விரிவாக்க முயற்சிகளில் தற்போது கன்னியாகுமரி ரப்பர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் விவசாயிகளும் இணைக்கப்பட்டுள்ளனர். பழங்குடியினர் அல்லது விவசாயிகள் கோகோ சாகுபடியில் ஈடுபட விரும்பும் விவசாயிகள் கன்னியாகுமரி ரப்பர் உற்பத்தியாளர் நிறுவனத்தில் தற்போது விற்பனைக்கு உள்ள கோகோ கன்றுகளை வாங்கி சாகுபடி செய்யலாம். தற்போது கோ கோ கன்று ஒன்று ரூ.20 என்ற அளவில் விற்பனை செய்யப்படுகிறது.

கோகோ கன்றுகள் வாங்க விரும்பும் விவசாயிகள் குலசேகரம் ஒழுங்கு முறை கூடத்தில் உள்ள கன்னியாகுமரி ரப்பர் உற்பத்தியாளர் நிறுவனத்தை தொடர்பு கொண்டு தங்களின் ஆதார் அடையாள அட்டை நகல், தொலைபேசி எண் மற்றும் வங்கி சேமிப்பு கணக்கு விபரங்களை வழங்கி பெற்றுக் கொள்ளலாம்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**





**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.

இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

தொடர்புக்கு
*+91 80563 05483*
*+91 9344811812*

நன்றி

# செலவே இல்லாமல் உரம் தயாரிக்கலாம்!

## ஈஷா மண் காப்போம் இயக்கம் நடத்துகிறது

நீலகிரி, நவ.10

இயற்கை உரம் தயாரிப்பதற்கான ஒரு நாள் களப் பயிற்சி நீலகிரியில் வரும் நவம்பர் 16ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறுகிறது. ஈ ஷா மண் காப்போம் இயக்கம் இப்பயிற்சியை நடத்துகிறது.

பயிற்சியானது, ஃபாரஸ்ட் ஸ்டிரீம் ஃபார்ம், காசோலை, டீஃபேக்டரி, ஊட்டி, நீலகிரி மாவட்டத்தில் நடைபெறுகிறது.

இந்தப் பயிற்சியில், இயற்கை உரங்களை பங்கேற்பாளர்களே தயாரிப்பதற்கு வாய்ப்பளிக்கப்படவுள்ளது.

மேலும், 14 வகையான இயற்கை இடுபொருள்கள் தயாரிப்பது குறித்து செய்முறைப் பயிற்சி, குறைந்த செலவில் மண்ணை வளமாக்கும் உரங்கள் தயாரிப்பது, ரசாயன உரத்துக்கான மாற்று இடுபொருள்கள், நோய் தடுப்பு மற்றும் பூச்சி விரட்டிகள் தயாரிப்பதற்கான பயிற்சி, பயிரில் மகசூலை அதிகரிக்கும் தொழில்நுட்பங்கள் உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

பயிற்சிக் கட்டணம் : ரூ.400/-. முன்பதிவு அவசியம்.

பயிற்சியில் கலந்து கொள்ள இந்த லிங்கை பயன்படுத்தவும். https://forms.gle/2VxrZ7AitxoBDDiM9.

தொடர்புக்கு – 83000 93777, 94425 90077.

இந்த பயிற்சிக்கான வாட்ஸ் அப் குரூப் லிங்க் Input training (16.11.2025).



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# பால் பண்ணையில் தினசரி செயல்பாடுகள் அட்டவணை

ஒரு பால் பண்ணையின் வெற்றிக்கான அடிப்படைஎன்பது திட்டமிட்ட, ஒழுங்கான தினசரி நடவடிக்கைகள் ஆகும். பண்ணை யாளர்கள் கடைபிடிக்கும் தினசரி பணிகளில் ஒழுங்கான ஒரு நிலையான பராமரிப்பு முறைகள் பால் உற்பத்தியை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், மாட்டின் ஆரோக்கியத்தையும், பண்ணையின் ஒட்டு மொத்த செயற்பாடுகளையும் மேம்படுத்த உதவுவதால் கறவை மாடுகள் மூலம் பண்ணையர்கள் சிறந்த உற்பத்தி மற்றும் லாபத்தை அடைய முடியும்.

பொதுவாக கறவை மாட்டுப் பண்ணையில் தினசரி வேலை யானது காலை 4.00-4.30 மணியிலிருந்தே வேலைகள் ஆரம்பித்து விடும். முதல் வேலையானது பால் கறப்பதாகும். பால் கறக்கும் பொழுது மாடுகளை அமைதியாகக் கையாள வேண்டும். பால்மடியை பாலை கறப்பதற்கு முன்னும் கறந்த பின்னும் பொட்டாசியம் பெர்மாங்கனேட் கிருமி நாசினி கலந்த நீரைக் கொண்டுகழுவி சுத்தம் செய்ய வேண்டும். பால் கறந்த உடன் மாடுகள் கீழே படுத்துவிடாத படி கட்டி வைத்து மாடு களுக்கு கலப்புத் தீவனம் கொடுக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் கறவை மாடுகளுக்கு மடிநோய் வருவதை பெருமளவு தவிர்க்க முடியும். தீவனம் உண்ட பிறகு மாடுகள் கீழே படுப்பதால் எந்த பாதிப்பும் இல்லை.

கறந்த பாலை சுத்தமான சல்லடை கொண்டு வடிகட்டி அசுத்தங்களை நீக்கிய பின் சுத்தமான பாத்திரங்கள் அல்லது பால்கலன்கள் மூலம் உடனடியாக விற்பனைக்கு அல்லது பாலை சேமிக்கும் குளிர்சாதன அறைக்கு அனுப்பிவிட வேண்டும். மாடுகளுக்கு கலப்புத் தீவனம் கொடுத்த பிறகு பசுந்தீவனம் கொடுக்க வேண்டும்.பிறகு உலர்தீவனம் கொடுக்க வேண்டும். மாடுகள் குடிப்பதற்கு எப்பொழுதும் சுத்தமான குடிநீர் கிடைக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். தீவனம் அளிக்கும் போது மாடுகளை உச்சி முதல் உள்ளங்கால் வரை பார்வையாலும் தடவிப் பார்த்தும் பரிசோதனை செய்து நடவடிக்கைகளில் மாற்றம், சோர்வு, தீவனம் உண்ணாமை, கழிச்சல், மடியில் வீக்கம், போன்ற அறிகுறிகளைக் கவனிக்க வேண்டும்.

**மாடுகளில் நோய்க்கான அறிகுறிகள்**

ஏதேனும் தென்பட்டால் உடனடியாக முதலுதவி செய்து விட்டு கால்நடை மருத்துவரை அணுகி சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். பிறகு மாட்டுக் கொட்டகை மற்றும் சுற்றுப்புறங்களை சுத்தம் செய்ய வேண்டும். மாடுகளின் கொட்டகையானது சுத்த மானதாகவும் ஈரமில்லாமலும் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். மதிய வேளையில் பசுந்தீவனம் வழங்க வேண்டும். குடிநீர் தொட்டிகளை சுத்தம் செய்து நீர் நிரப்ப வேண்டும். பண்ணை உபகரணங்களையும் பால் கறக்க பயன்படுத்தப்படும் பாத்திரங்களையும் நன்கு கழுவி வெயிலில் உலர்த்த வேண்டும்.

மாலை 3.00-4.00 மணி அளவில் மாலையில் இரண்டாம் முறையாக பாலைக் கறக்க வேண்டும். காலை போலவே, மாலைக் கறவையிலும் சுத்தம், அமைதி மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பாலைக் கறந்த பின் கலப்புத் தீவனம், பசுந்தீவனம் மற்றும் உலர்தீவனங்களை வரிசையாக வழங்க வேண்டும். பிறகு, மாடுகளின் கொட்டகை களை மீண்டும் சுத்தம் செய்ய வேண்டும். கொட்டகையில் கிருமி நாசினிகள் தெளிக்கவும் வேண்டும். அன்றாடம் செய்த வேலை களை பண்ணைப் பதிவேடுகளில் பதிவு செய்ய வேண்டும். இதற்கிடையில் நேரம் கிடைக்கும் பொழுது மாடுகளை சிறிது நேரம் உடற்பயிற்சிக்காக காலாற நடக்கவிட வேண்டும். பண்ணையில் கடைப்பிடிக்கும் நடைமுறைகளை அடிக்கடி மாற்றக்கூடாது.

அவ்வாறு மாற்றும் பொழுது மாடுகளின் ஆரோக்கியம் கெடுவதோடு உற்பத்தித் திறனும் பாதிப்படையும். உதாரணமாக பால் கறவை என்பது ஒரு குறிப்பிட்ட நேரம் என்றால் அந்த நேரத்தில் பால் கறக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் பால் கறப்பதில் தாமதம் ஏற்படும் பொழுது மாடுகளுக்கு மடி நோய் பாதிப்பு ஏற்பட வாய்ப்புகள் அதிகம். தினசரி பணிகள் போலவே வாரம் ஒரு முறை,மாதம் ஒரு முறை, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, ஆறு மாதங்களுக்கு ஒரு முறை மற்றும் வருடத்திற்கு ஒரு முறை செய்ய வேண்டிய பணிகளையும் தவறாமல் அட்ட வணைப் படுத்தி நடைமுறைப்படுத்த வேண்டும். உதாரணமாக வாரம் ஒரு முறை கொட்டகையின் சுற்றுப்புறங்களில் உள்ள களைச்செடிகளை நீக்கி சுத்தம் செய்தல், சாணத்தை பண்ணை யிலிருந்து அப்புறப்படுத்துதல் போன்றவையும், மாதம் ஒரு முறையாக இளம் கன்றுகளுக்கு குடற்புழு நீக்க மருந்துகள்

கொடுப்பது, தண்ணீர் தொட்டிகள் பச்சைப்பாசி பிடிக்காமல் இருப்பதற்காக சுண்ணாம்பு அடித்தல், மாடுகளின் கால் குளம்புகளை சுத்தம் செய்தல் போன்றவையும் மூன்று மாதங் களுக்கு ஒரு முறையாக பண்ணை கருவிகளின் பராமரிப்பு போன்றவையும், ஆறு மாதங்களுக்கு ஒரு முறை மாடுகளுக்கு குடற்புழு நீக்க மருந்துகள் கொடுப்பதும் காணை நோய்த் தடுப்பூசிகள் போடுவதும், வருடம் ஒரு முறையாக தடுப்பூசிகள் வழங்குதல், கொட்டகை மராமத்து வேலைகள் பார்த்தல் போன்றவையும் அடங்கும்.

ஒரு நிலைத்த, ஒழுங்கான அட்டவணையை பின்பற்றுவது மாடுகளின் நலனுக்கும் பண்ணையின் செயல்திறனுக்கும் முக்கியம்.

பண்ணையில் வேலை செய்பவர்களின் வேலை நேரங்களை திட்டமிட்டு, பணிகளை முறையாக ஒதுக்குவதற்கும், முறையான நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், சிறந்த பண்ணை நிர்வாகத்திற்கும் வழிகாட்டுதலாக அமையும்.

தகவல் : **டாக்டர் இரா.உமாராணி, பேராசிரியர், கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆய்வு மையம், திருப்பரங்குன்றம், மதுரை - 625 005.**

# நிலக்கடலையில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் பயிற்சி



கடலூர், நவ.10

கடலூர் மாவட்டம், விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலையம், சார்பாக நிலக்கடலையில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி 10.11.25 அன்று எடங்கொண்டான்பட்டு (குறிஞ்சிப்பாடி வட்டாரம்) கிராமத்தில் நடைபெற்றது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

இப்பயிற்சியின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க.நடராஜன், நிலக்கடலையில் சாகுபடி தொழில்நுட்பங்கள், புதிய இரங்கள், விதைநேர்த்தி, உயிர் உரங்கள், நோய் எதிர் உயிர் கொல்லி விதைநேர்த்தி, களைநிர்வாகம், ஜிப்சம் மற்றும் மண் அனைத்தல் பயன்பாடு, வேம்பு பொருட்கள் கொண்டு பூச்சி நோய் பாதுகாப்பு, த.வே.ப.க பயிர் ஊக்கி நிலக்கடலைரிச் மற்றும் த.வே.ப.க இணையத்தளம் பயன்பாடு பற்றி விவசாயி களுக்கு விரிவாக எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் எடங் காண் டான்பட்டு கிராமம், றிஞ்சிப்பாடி வட்டாரத்தை சேர்ந்த 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.



# பருத்தி பயிரைத் தாக்கும் பூச்சிகள்?



தென்மாவட்டங்களில் மானாவாரியாக பயிரிட்டுள்ள பருத்தி செடிகளில் சாறு உறிஞ்சும் பூச்சிகளான இலைப்பேன், தத்துபூச்சி, அசுவிணி மற்றும் காய்புழுக்கள் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனுடைய தாக்குதல் அறிகுறிகள் மற்றும் தடுப்பு முறைகளை பற்றி விரிவாக பார்ப்போம்.

பருத்தி பரவலாக பயிரிடப்படும் ஒரு பணப்பயிராகும். இதில் ஆரம்ப கட்டத்தில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்கம் (SUCKING PEST) அதிகமாக இருக்கும்.

**1) இலைப்பேன் (THIRPS)**

இது இலையின் அடியிலும் ஓரங்களிலும் மஞ்சள் நிற பூச்சிகளாக ஊர்ந்து வரும் இலையின் நரம்புகளில் முதிர்ந்த பேன்கள் முட்டையிடும்.

**தாக்குதல் அறிகுறி**

நரம்புகளில் பச்சையம் அரிக்கப்பட்டு, வெள்ளிப்போல மினுமினுப்பாக இருக்கும். வறட்சியான காலங்களில் இதனுடைய தாக்கம் அதிகமாகும். மழைக்கால ங்களில் தாக்கம் குறையும்.

**2) தத்துப்பூச்சி (JASSIDS)**

இலைகளின் அடியில் பச்சை தத்துப்பூச்சி பக்கவாட்டில் நகரும் இதனுடைய பருவம் 7 முதல் 21 நாட்களாகும்.

**தாக்குதலின் அறிகுறி**

இலைகள் மேடு பள்ளமாக, சுருக்கமாக மற்றும் மஞ்சள் றமாக காணப்படும். நாளடைவில் பழுப்பு தட்டி சிவப்பாகி கருகி விடும். சாம்பல் சத்து பற்றாக்குறையாலும் மெக்னிசிய சத்துகள் பற்றாக்குறையாலும் இலைகள் சிவப்பாக மாறும்.

### 3) அசுவிணி (APHIDS)

இலைகள் கீழ்நோக்கி குவியும், இலைகள் சிறுத்து காணப் படும். இதனுடைய எச்சத்தை சாப்பிட எறும்புகள் கூட்டமாக கூட்டமாக இருக்கும் அசுவிணி சுரக்கும் தேன் போன்ற திரவத்தில் (HONEY DEW SECRETION) வளரும் பூஞ்சாணத் தால் இலைகள் கருமையாக காணப்படும்.

### கட்டுப்படுத்தும் முறைகள்

சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்திட வேண்டும். முதலில் 5% வேப்பங் கொட்டை சாறு கரைசல் தெளிக்க வேண்டும். இந்த கரைசல் தெளிப்பதால் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் இனப்பெருக்கம் கட்டுப்படுத்திட முடியும் முதிர்ந்த பூச்சிகளை கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் 200 S.L 40 ML மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கரைத்து தெளிக்கலாம்.

களைச்செடிகளை உடனுக்குடன் அகற்றிட வேண்டும். இயற்கை எதிரிகளை ஊக்குவிக்க வேண்டும்.

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.



# அங்கக வேளாண்மை குறித்து ஒரு நாள் அறிவுசார் கண்டுனர் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்ட மாணவர்கள்




ராணிப்பேட்டை, நவ.10 பள்ளி மாணவர் களுக்கு இயற்கை வேளாண்மை குறித்து விழிப்புணர்வு அவசியம் என்று வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் சட்டசபையில் அறிவித்ததன்படி மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலோடு ராணிப்பேட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் செல்வராஜ் வழிகாட்டுதலின் படி, அரக்கோணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் தி.லோ.அனுராதா தலைமையில் அங்கக வேளாண்மையில் புதிய செயல்பாடுகள் குறித்து ஒரு நாள் அறிவுசார் கல்விச் சுற்றுலாவாக 100 மாணவர்களை ஜெயா வேளாண்மை கல்லூரி, வியாசபுரம், மற்றும் சாய் அங்கக பண்ணை, காவேரிராஜபுரம் ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதில் அரக்கோணம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியைச் சார்ந்த 50 மாணவிகள் மற்றும் குமினிப்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளியைச் சார்ந்த 50 மாணவிகள் கலந்து கொண்டனர். கண்டுணர்வு பயணத்தில் மாணவிகளுக்கு அங்கக வேளாண்மை குறித்த தொழில்நுட்பங்கள், மண்புழு உரம் தயாரித்தல், காய்கறி நாற்றங்கால் அமைக்கும் முறைகள், பஞ்சகாவ்யா தயாரிக்கும் முறைகள், காளான் வளர்ப்பு குறித்த செயல் விளக்கங்கள் மற்றும் நன்மை செய்யும் பூச்சிகள், இயற்கை முறையில் பூச்சி விரட்டி குறித்து மாணவிகளுக்கு பயிற்சி அளித்தனர். பள்ளி மாணவி களுடன் அரக்கோணம் மற்றும் கும்மினிப்பேட்டை பள்ளியைச் சேர்ந்த ஆசிரியைகள் உடன் வந்திருந்தனர்.

வேளாண்மை துறை சார்பாக துணை வேளாண்மை அலுவலர் மாதயன், உதவி விதை அலுவலர் சத்தியம், அட்மா வட்டார தொழில் நுட்ப மேலாளர் கோ.மோகனசுந்தரம், தொழில்நுட்ப மேலாளர்கள் வா ஹே ஹேமந்த் குமார் மற்றும் பூ கி பிரகதீஸ்வர் ஆகியோர் இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**—தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW · isha · POWERGRID · BHEL

**Office**
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# நெல்லில் இலை வண்ண அட்டை மூலம் தழைச்சத்து மேலாண்மை

பொதுவாக பெரும்பாலான பயிர் சாகுபடியில் முறையான ஊட்டச் சத்து மேலாண்மையைக் கடைபிடிப்பதில்லை. அதிலும் குறிப்பாக யூரியா போன்ற தழைச்சத்து உரங்களை அதிகப் படியாகப் பயன் படுத்துகின்றனர். இதனால் பயிர் கருகருப்புக் கூடுவதுடன் பூச்சித் தாக்குதலுக்கும் எளிதில் உட்படுகிறது. மேலும் இவ்வதிகப்படியான பயன்பாடு மண், நீர் மற்றும் சுற்றுச்சூழல் மாசுபாட்டிற்கும், அதிகப் படியான பசுமைக்குடில் வாயு வெளி யேறி உலக வெப்பமய மாதலுக்கும் வழிவகுக்கிறது.

எனவே, நெல் சாகுபடியில் முறையான ஊட்டச்சத்து மேலாண் மைக்கு இலை வண்ண அட்டை மூலம் தழைச்சத்து மேலாண்மை செய்யலாம். இலை வண்ண அட்டையின் அளவீடுகள் மூலம் தழைச்சத்து இடும் நேரம் நட்ட 14 நாட்களுக்குப் பிறகு எடுக்க வேண்டும் அல்லது நேரடி நெல் விதைத்த 21 நாட்களுக்குப் பிறகு அளவீடுகள் எடுக்க வேண்டும். பூப்பூக்கும் பருவத்திற்கு முன் வரை வார இடைவெளியில் திரும்பத் திரும்ப அளவீடுகள் எடுக்க வேண்டும். இலையின் நிறத்தை அளவெடுக்க, மேலிருந்து 3வது இலை தான் குறியீட்டு இலை. இலை வண்ண அட்டையின் மூலம் காலையில் 8லிருந்து 10 மணிக்குள் இலையின் நிறத்தைப் பொருத்திப் பார்க்க வேண்டும். வெள்ளைப் பொன்னியில் இலை வண்ண அட்டையில் குறிப்பிட்ட மதிப்பு 3க்கும் குறைவாக இருந்தால் மற்றும் பிற ரகங்கள் மற்றும் வீரிய இரங்களில் 4க்கு குறைவாக இருந்தால் தழைச்சத்து குறைவு என அறியலாம்.

மேற்படி பத்து எண்ணிக்கையில் ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட இலைகளின் வண்ணம், பரிந்துரைக்கப்பட்ட ஒப்பீட்டு வண்ண அளவான 3க்கு கீழ் பொன்னி இரகத்திலும், மற்ற இரகங்களின் ஒப்பீட்டு அளவு 4க்கு கீழும் இருக்குமானால், பயிருக்கு தழைச்சத்து ஒவ்வொரு முறையும் கீழ்வருமாறு இட வேண்டும் என சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வெ.விமலா கூறினார்.

| விதைப்புப் பருவம் | தழைச்சத்து அளவு (கிலோ/எக்டர்) | யூரியா உர அளவு (கிலோ/எக்டர்) |
|---|---|---|
| குறுவை | 35 | 76 |
| சம்பா/தாளடி | 30 | 65 |

மேற்கண்ட பரிந்துரை நடவு நெல்லுக்கும், நேரடி விதைப்பு (Direct Drum Seeded) நெல்லுக்கும் பொதுவானது.

# புதிய தொழில்நுட்பத்தை கண்டுபிடிக்கும் விவசாயிகளுக்கு பரிசு : வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அறிவிப்பு

இராணிப்பேட்டை, நவ.10

புதிய தொழில்நுட்பத்தை கண்டுபிடிக்கும் விவசாயிகளுக்கு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை மூலம் பரிசு வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது.

நவீன வேளாண் கருவிகள், சாகுபடி தொழில்நுட்பங்கள் கண்டுபிடிப்புகளுக்கு மாநில அளவில் முதல் பரிசாக ரூ.2.5 லட்சம், இரண்டாம் பரிசாக ரூ.1.5 லட்சம் மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.1 லட்சம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பங்கு பெற விரும்பும் விவசாயிகள் தங்களது பெயரை உழவன் செயலி மூலம் பதிவு செய்து, நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பத்தை சம்மந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் வழங்க வேண்டும். பதிவு கட்டணமாக ரூ.150/- செலுத்த வேண்டும்.

பங்கேற்பாளர்கள் தனது கண்டுபிடிப்பு குறித்த விளக்கம் மற்றும் விவரங்களுடன் மாவட்ட அளவிலான குழுவிடம் செயல் விளக்கங்கள், இயந்திரங்கள், புகைப்படம் அல்லது வீடியோ போன்றவற்றுடன் விளக்க வேண்டும். போட்டியில் கலந்து கொள்ளும் விவசாயியின் கண்டுபிடிப்பு அவரது சொந்த கண்டு பிடிப்பாக இருக்க வேண்டும்.

இந்தத் தொழில்நுட்பத்தை வைத்து வேற எந்தப் போட்டியிலும் கலந்துகொண்டு பரிசு பெற்றிருக்கக் கூடாது. விருதுக்கு சமர்ப்பிக்கப்படும் இயந்திரம் வேறு ஒரு தனி நபருடைய தயாரிப்பின் அசலாகவோ, மேம்படுத்தப்பட்டதாகவோ இருக்கக் கூடாது.

இதற்கான குறிப்புரை வேளாண் பொறியியல் துறையின் மூலம் பெறப்படவேண்டும். புதிதாக கண்டுபிடிக்கப்படும் தொழில் நுட்பமானது அனைத்து விவசாயிகளும் எளிதல் கடைபிடிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

போட்டியாளர்களின் கண்டுபிடிப்பு விவசாயிகளின் வேளாண்மை செலவினத்தை குறைக்கும் வகையிலும், விலை குறைவானதாகவும் இருக்க வேண்டும்.

வெற்றியாளர்களை அறிவிப்பதில் வேளாண்மை இயக்குநரின் தலைமையிலான மாநில குழுவினரின் முடிவே இறுதியானது.

எனவே இராணிப்பட்டை மாவட்டத்தில் புதிய வேளாண் கருவிகள், சாகுபடி தொழில்நுட்பங்களை கண்டுபிடித்து வைத்திருக்கும் விவசாயிகள் / பொதுமக்கள், இப்போட்டியில் பங்குபெறுமாறு இராணிப்பேட்டை வேளாண்மை இணை இயக்குநர் க. செல்வராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

# திருந்திய நெல் சாகுபடிக்கான மாநில அளவிலான விருது

சேலம், நவ.10

சேலம் மாவட்டம், அயோத்தியபட்டினம் வட்டாரத்தில் தற்சமயம் சம்பா நெல் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்த பருவத்தில் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தினை கடைப்பிடித்து நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு நமது தமிழ்நாடு அரசு சார்பில் நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பயிர் விளைச்சல் போட்டியில் போட்டியிடும் விவசாயி குறைந்தபட்சம் 2 ஏக்கர் பரப்பளவில் திருந்திய நெல் சாகுபடி செய்பவராக இருக்க வேண்டும். மேலும் தொடர்ந்து மூன்று ஆண்டுகள் திருந்தி நெல் சாகுபடி செய்த முன்னோடி விவசாயி-யாக இருக்க வேண்டும். மேலும் நில உரிமை தாரர்கள் மற்றும் குத்தகைதாரர்களும் இப்போட்டியில் கலந்து கொள்ளலாம். அரசால் அங்கீகரிக்கப்பட்ட நெல் ரகங்களை மட்டுமே பயிர் செய்திட வேண்டும். இப்பயிர் விளைச்சல் போட்டியில் கலந்து கொள்ள விவசாயி ரூ.150/- பதிவு கட்டணமாக செலுத்திட அயோத்தியாபட்டிணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ப.சண்முகப்பிரியா கேட்டுக்கொள்கிறார்.



# தமிழ்நாட்டில் மீன் வளர்ப்பு மனித பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் தாக்கம் – ஓர் ஆய்வு

மீன்வளம் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், உணவுப் பாதுகாப்பிற்கும் முக்கிய பங்காற்றும் துறையாகும். இந்தியாவில் மீன் உற்பத்தியில் தமிழ்நாடு முன்னணி மாநிலங்களில் ஒன்றாக விளங்குகிறது. கடலோர மீன்பிடி, உள்நாட்டு நீர்வளம் மற்றும் மீன் வளர்ப்பு ஆகியவை மாநிலத்தின் கிராமப்புற வாழ்வாதாரத்தின் முக்கிய ஆதாரமாகும்.




## தமிழ்நாட்டில் மீன் வளர்ப்பின் வரலாறு

● மீன் வளர்ப்பு தமிழ்நாட்டில் நூற்றாண்டுகளாக நடைமுறையில் உள்ளது. பாரம்பரியமாக ஏரிகள், குளங்கள், ஆறுகள் மற்றும் நிலத்தடி நீர் பகுதிகளில் மீன்கள் வளர்க்கப்பட்டன. 1950-களுக்குப் பின் அரசு திட்டங்களின் மூலம் மீன் வளர்ப்பு தொழில்நுட்பமாக வளர்ச்சியடைந்தது.

● 1970-இல் தமிழ்நாடு அரசு மீன்வளத்துறையை தனித்துறை ஆக அமைத்தது.

● 1990-க்குப் பின் ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு மற்றும் செயல்முறை அக்வா கல்ச்சர் திட்டங்கள் தொடங்கப்பட்டன.

## தமிழ்நாட்டில் மீன்வளப் புள்ளிவிவரங்கள்

● தமிழ்நாட்டின் கடற்கரை நீளம் சுமார் 1,076 கிலோமீட்டர் மற்றும் உள்நாட்டு நீர்நிலைகள் 3.8 லட்சம் ஹெக்டேர் பரப்பளவைக் கொண்டுள்ளன.

● **வருடாந்திர மீன் உற்பத்தி :** சுமார் 9.5 லட்சம் டன்

● மாநிலத்தின் மக்கள் தொகையில் 6% பேர் நேரடியாக அல்லது மறைமுகமாக மீன்வளத்துடன் தொடர்புடையவர்கள்.

● மீன்வள துறை மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) சுமார் 1.3% பங்களிக்கிறது.

## மீன் வளர்ப்பு முறைகள்

### உள்நாட்டு மீன் வளர்ப்பு

● குளங்கள், ஏரிகள், கால்வாய்கள் போன்றவற்றில் கார்ப் வகைகள் (ரோஹு, கட்ட்லா, மிரிகல்) அதிகம் வளர்க்கப்படுகின்றன.

### கடலோர மீன் வளர்ப்பு

● முத்துச்சிப்பி, நண்டு, இறால் போன்ற உயர் மதிப்புள்ள வகைகள் வளர்க்கப்படுகின்றன.

### ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு

● விவசாயத்துடன் இணைந்த மீன் வளர்ப்பு (paddy - fish integration) மூலம் நிலம் முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

### பொருளாதார பங்களிப்பு



- மீன்வளம் கிராமப்புற மற்றும் கடலோர மக்களின் முக்கிய வருவாய் ஆதாரம் ஆகும்.

- **வேலை வாய்ப்பு :** மீன் பிடிப்பு, வளர்ப்பு, செயலாக்கம், போக்குவரத்து, விற்பனை ஆகிய துறைகளில் லட்சக் கணக்கானோர் பணியாற்றுகின்றனர்.

- **ஏற்றுமதி வருவாய் :** தமிழ்நாட்டிலிருந்து இறால், நண்டு, மீன் உற்பத்திகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

- **சிறு தொழில்கள் :** மீன் ஊறுகாய், உலர் மீன், மீன் உணவு தயாரிப்பு போன்ற சிறு அளவிலான தொழில்கள் பெண்கள் மற்றும் கிராமப்புற மக்களுக்குத் தொழில் வாய்ப்பாக உள்ளன.

### மீன் உணவின் ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கிய நன்மைகள்

- மீன் உணவு மிகுந்த ஊட்டச்சத்து மதிப்பு கொண்டது

- புரதச்சத்து (ஊெஷெலிமிளஷ்ஜ) அதிகம்

- ஓமேகா–3 கொழுப்பு அமிலங்கள் (Omega - 3 fatty acids) இதய ஆரோக்கியத்திற்கு முக்கியம்

- வைட்டமின் டி, பி12, இரும்பு மற்றும் பாஸ்பரஸ் நிறைந்தது

- மீன் உணவு உடல் வளர்ச்சிக்கும், மூளை செயல்பாட்டிற்கும், நோய் எதிர்ப்பு திறனுக்கும் உதவுகிறது.

### சமூக தாக்கம்

- மீன்வளம் பெண்கள் சுயநிறைவு அடையவும், கிராமப்புற வாழ்க்கைத் தரம் உயரவும் முக்கிய பங்காற்றுகிறது.

- பெண்கள் மீன் விற்பனை, உலர் மீன் தயாரிப்பு போன்ற துறைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

- மீன்வளக் கூட்டுறவுகள் சமூக ஒற்றுமையை வளர்க்கின்றன.

- கல்வி மற்றும் சுகாதார வசதிகளைப் பெறுவதற்கு மீன்வள வருமானம் பங்களிக்கிறது.

மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

### சவால்கள் மற்றும் தீர்வுகள்

- கடலோர மாசுபாடு மற்றும் மீன்பிடி அதிகரிப்பு
- பருவநிலை மாற்றம்
- கடன் வசதி மற்றும் சந்தை ஆதரவு குறைவு
- நவீன தொழில்நுட்ப பற்றாக்குறை
- அரசு ஆதரவுடன் அக்வாகல்ச்சர் பயிற்சிகள்
- இனப்பெருக்க மையங்கள் நிறுவல்
- உயிரின வேற்றுமை பாதுகாப்பு
- பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு நிதி உதவி திட்டங்கள்


மீன் வளர்ப்பு துறை தமிழ்நாட்டில் எதிர்காலத்தில் மிகப்பெரிய வளர்ச்சியை நோக்கி செல்கிறது. செயற்கை நீர்நிலைகள், ஆர்கானிக் மீன் வளர்ப்பு, விலையுயர்ந்த கடல் வகைகள் ஆகியவை பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். முடிவாக, மீன்வளம் ஒரு உணவு மற்றும் ஆரோக்கிய ஆதார மாக மட்டுமல்லாமல், மனித பொருளாதார முன்னேற்றத்திற்கும் முக்கிய தளமாக விளங்குகிறது.



தொழில்நுட்பம், அரசு ஆதரவு மற்றும் சமூக பங்களிப்பு ஒருங்கிணைந்தால், தமிழ்நாடு மீன்வள துறையில் உலகளாவிய முன்னேற்றத்தை அடையும்.

தகவல் : **வெங்கடேஷ் ம, நிவேதா, ஆ.ல. உதவிப் பேராசிரியர்கள் (தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல்), ஸ்ரீதேவி ச, நான்காமாண்டு மாணவி, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு.**




கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# இப்கோ நானோ டி.ஏ.பி விழிப்புணர்வு கருத்தரங்கம்



திருவாரூர், நவ.10

திருவாரூர் மாவட்டம், குளிக்கரை தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் இப்கோ சார்பில் நானோ டி.ஏ.பி விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

இக்கருத்தரங்கத்தில் இப்கோ கள அதிகாரி, நானோ யூரியா, நானோ டி.ஏ.பி, நானோ ஜிங்க், நானோ காப்பர், சாகரிகா உள்ளிட்ட இப்கோவின் நவீன நானோ உரங்களின் பயன்பாடு மற்றும் அவற்றின் நன்மைகள் குறித்து விவரமாக விளக்கினார்.

அவர் மேலும், நெற்பயிரில் நானோ டி.ஏ.பி பயன்பாட்டு முறைகள் குறித்து விளக்கும் போது,

● விதை நேர்த்தி முறையில், ஒரு கிலோ விதைக்கு 5 மி.லி நானோ டி.ஏ.பி கலந்து 25-30 நிமிடங்கள் நிழலில் உலர்த்தி விதைக்கலாம் என்றார்.

● நாற்று நேர்த்தி முறையில், ஒரு லிட்டர் நீரில்5 மி.லி நானோ டி.ஏ.பி கலந்து 25-30 நிமிடங்கள் ஊறவைத்து பின் நடவு செய்யலாம் என்றும் தெரிவித்தார்.

விதை அல்லது நாற்று நேர்த்தி செய்தால் டி.ஏ.பி அடியுரத்தின் தேவையை சுமார் 25% வரை குறைக்கலாம் என்றும் கூறினார்.அதோடு, நானோ டி.ஏ.பி பயன்பாட்டால் குருணை உரம் பயன்படுத்துவதால் ஏற்படும் பசி பிரச்சினைகள் குறைந்து, பயிர் வளர்ச்சி சீராக இருக்கும் என்றும் விளக்கினார்.

பின்னர், இலைவழி தெளிப்பிற்கு ஒரு லிட்டர் நீரில் 5 மி.லி நானோ டி.ஏ.பி கலந்து, பயிரின் முக்கிய வளர்ச்சி நிலைகளான கிளைப்பு மற்றும் துளிர்விடும் கட்டங்களில் தெளிக்க வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார்.


ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம்
கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு
செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396